

# அமரர்
# தனிநாயகம் பாஸ்கரன் (கரன்)
## (இலங்கை வங்கி ஊழியர்)
## அவர்களின் சிவபதப்பேறு குறித்த
## 90 ஆம் நாள் நினைவு மலர்
## 2019.01.08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னேரிக்குளத்தை பிறப்பிடமாகவும்,
பெரியதம்பனை வவுனியாவை வதிவிடமாகவும்
கொண்ட இலங்கை வங்கி ஊழியர்

அமரர்

# திரு.தனிநாயகம் பாஸ்கரன்

## (கரன்)

# 2019.01.08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



பெற்றோர்க்கு நன் மகனாய்

சோதரர்க்கு நல் அண்ணனாய்

மனைவிக்கு நல் பதியாய்

பிள்ளைகளுக்கு கண்கண்ட

தெய்வமாய், உற்றார் உறவினர்

நண்பர்க்கு அன்பாளனாய்

மணியகத்தில் கடமை வீரனாய்

எமக் கெல்லாம் வழிகாட்டிய

குல விளக்கிற்கு இன் நூல்

ஓம் சாந்தி!

ஓம் சாந்தி!!

சாந்தி!!!

இங்கனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை மடியில்
1976.06.20

அமரர்

காலன் அடியில்
2018.10.11

# தனிநாயகம் பாஸ்கரன் (கரன்)

## திதி நிர்ணய வெண்பா

இன்முகத்து ஏந்தல் எழிலார்ந்த வாழ்வுடையோன்
தனிநாயகம் பாஸ்கரன் எனும்புனிதன் மண்ணீத்து
விளம்பியாண்டு புரட்டாதிப் பதினொன்று திருதியையில்
இறைவன் தாளிலுற்றார் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை துதிப்பாக்கள்



## விநாயகர் துதி

பிடியதனுருவுமை கொள மிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடும் அவரிடம்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலி வலமுறை இறையே

# பஞ்ச தோத்திரம்

## தேவாரம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே நற் சோதி மிக்க
உருவே யென் னுறவேயென் னூனே யூனின்
உள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோ யடையா வண்ணம்
ஆவடு நண்டுறையுறையு மமரரேறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வாழ்கின்றாய் வாழாத
நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற்
காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச்
சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக்
கடலாய் வெள்ளத்தே

## திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தரு திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியுங் கொன்றையுந் துன்று
பொற்குழற் றிருச் சடையும்
திவள மாளிகை சூழ் தரு தில்லையுட்
திரு நடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறு எமன் மனந்
தழன் மெழு கொக்கின்றதே

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
ஆணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியுமாடியும்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்குத் திருப் பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தர முணர்ந்தார் அந்நிலையில்

## திருப்புகழ்

உம்பர்தருத் தேநுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக் கானநிலைப் பொருளோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானை முகப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

இந்து மா கடலின் தீவுகளில் ஒன்றான ஈழத் திரு நாட்டின் தீவுகளில் சென்னியாய் விளங்கும் நெடுந்தீவின் வம்சாவழி வந்த மாண்புமிகு வளங்கொளிக்கும் வன்னேரியில் வசிப்பிடமாய் கொண்டிலங்கும் தனிநாயகம் கமலாம்பிகை தம்பதியர் தவப்பயனாய் பெற்றெடுத்த தலை மகனாய் 1976.06.20 அன்று வந்துதித்தார்.

பாசமாய் பாஸ்கரன் எனும் நாமமிட்டு பார்வைக்கு சூரியனாய் பிரகாசித்தும் பண்பிலே பூரண சந்திரனாய் இலங்கியும் பார்ப்போரை பிரமிக்கும் அழகுடனே மழலை மொழி பேசி வளர்ந்து வந்தார். அன்பிற்கு ஒரு தம்பியும் அவர் பின்னே ஆசைக்கொரு தங்கையுமாய் அன்பான குடும்பமாக அழகொழிர ஆனந்தமாய் வாழ்ந்திருந்தார். பள்ளிப் பருவமதில் துள்ளித் திரிந்து பண்போடு கிளிவன்னேரிக்குளம் இருக்கும் மாண்புமிகு மகாவித்தியாலயத்தில் பார் போற்றும் கல்விதனை பண்போடு கற்றுவந்தார். அவர் பணிவும் அமைதியுமே தனியிடத்தை ஆசான் மனத்தினிலே பதிந்திடவும் பண்பான பிள்ளையென பலர் பாராட்டும் பெற்றிருந்தார்.

உற்றார் உறவினர்கள் அயலவர் உற்ற நண்பரிடத்திலுமே உண்மை அன்பு செலுத்தி நல்ல உள்ளத்தில் இடம் பிடிக்கும் உத்தமனாய் வாழ்ந்திருந்தார் கற்ற கல்விக் கமையவே கண்ணியமாய் வாழவென்றால் உயர்வுக்கு வழி ஒன்றே உழைப்பெனவே உணர்ந்துகொண்டார். அன்புக்கு அடிமையவன். தன் அன்புத்தங்கைக்கு நல் தோழன். அண்ணைக்கோ ஆருயிர் தம்பிக்கு மந்திரியாம் செல்லத் தங்கைக்கு ஆண்டவனாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாம் ஒரு சேர வைத்துவிட்டு 2012ல் வெளிநாடு சென்று தன் குடும்பம் வளம் பெறவே உழைத்துக் காக்கும் குடும்பத்தின் பொறுப்பதனைதோழிலே பொறுப்பதனை தோழிலே சுமந்திட்டார். 2005ல் தன் நாடு திரும்பினார். 2006ல் இலங்கை வங்கி வவுனியாவில் இணைந்து நல் பணியாளனாய் இயற்றும் நல்ல சேவை செய்தார். அர்ப்பணிப்பும் அமைதியுமே அவர் அங்கு பதவி பெற்று உயர்வதற்கு உதவியது.

மணப் பருவம் எய்திவிட மனம் கொண்ட மனைவியாய் பெரிய தம்பனையை வாழிடமாய் மாண்புடனே விளங்கும் முருகேசு நாகேஸ்வரி தம்பதியரின் இரண்டாவது புத்திரியும் உபதபால் அதிபராய் சேவைசெய்யும் லோகேஸ்வரியை 26.10.2008ல் இல்லறத்தில் இணைத்துக் கொண்டு இன்பமாய் வாழ்ந்திருந்தார். இல்லறத்தின் நற்பயனாய் நல்மழலை செல்வமாக லிதுஷன், விதுஷன் என்னும் இரு கண்ணாய் பெற்றெடுத்து இன்பமுற வாழ்ந்திருந்தார்.

பிள்ளைகள் இருவர்க்கும் பற்றுக்கொண்ட உயிரானார்.கல்வி கேள்விகளில் சிறக்க வென்றே கடமைகளை இனிதாற்றி வந்திருந்தார். பிள்ளைகள் இருவருக்கும் பேரர்கள் ஒத்தாசை மேலோங்கும் அத்தையின் அரவணைப்பும் அன்பாக அக்குடும்பம் அழகான கூட்டுக் குடும்பத்தின் குதூகலமே கண்பட்டுப் போனதுவோ! காலன் அவன் பறித்திட்டான். கலங்குகிறோம் கண்ணீரை காணிக்கையாக்கி .........

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்".

என்பதற்கமைய வாழ்ந்து அமரத்துவம் அடைந்த அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் அனைவரும் பிரார்த்திப் போமாக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் உளக்குமுறல்

மங்களம் பெருக என் வாழ்வில்
வளம் பல சேர்த்தவரே
உங்களைத் தவற விட்டு
ஓய்வின்றிக் கதறுகின்றேன்
தங்கத் திருமேனிக்கு ஒரு
பொல்லாப்பு நேர்ந்ததுவோ!

உலைதனில் நெருப்பாக
ஊழித் துன்பம் வந்த போதும்
மலை போலிருந்து உம்மை
மணங் கொண்டு நின்றிருந்தேன்
ஊழிக் காற்றில் ஓர்
உயர்ந்த மரம் சாய்ந்ததுவோ
அன்புச் செல்வரே உங்கள்
வீராப்புப் போனதெங்கே...?

## பிள்ளைகளின் கலங்கல்

அன்புத் தந்தையே
ஆசைப் பெருநிதியே
இன்பத் தேரேற்றி எம்மை
இவ்வுலகில் காத்தீரே
மண்ணுலகில் ஓர் மாற்றுக் குறையாத
மாசற்ற தங்கமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் தவிப்பு

மடி அமர வீற்றிருந்த பொற்கொடியே
மாமணியே மாணிக்கமே
வடி வழகோ பொன்னிறமும் சந்தணமும்
சேர்ந்து உதித்ததுவோ
கொடி மரமாய் குடியுயர உழைத்தீரே
பேர் சொல்ல பிள்ளையென
கடி மணமாய் மாலைசூடி நீ வாழ
வாசுகியாய் இணைத்து வாழ்த்தினோம்
படி உயர்ந்து பார் புகழ செல்வங்களாய்
இரண்டைப் பெற்று மகிழ்ந்தீரே
முடி அரசன் உன்னைக் காலன் அழைக்க
அன்னை என அழைக்க பெற்ற மகன்
யாருமின்றி வாடுகின்றேன் யான் செய்த
பழி என்ன அறியேனோ...

# தந்தையின் அவலம்

செந்தாமரையாள் பெற்றெடுத்த
தேர் முடியே எங்கு சென்றீர்
மாமலராள் பெற்றெடுத்த
மாமணியே எங்கு சென்றீர்
கோடி தவமிருந்து
கோகிலனை பெற்றெடுத்தோம்
கோலம் தான் மாறியதால்
சீர்குலைந்து போனோம் ஐயா!
மைந்தரைப் பெற்றோம் என்று
மனம் மகிழ்ந்து கொண்டோமே
மாண்பு கொண்ட பொன்முகமும்
புன்சிரிப்பும் போன தெங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கையின் தயங்கல்

எனக்கு இரு சிறகாய்
இரண்டண்ணன் என்றிருந்தேன்
என் சிறகொன்று சின்னண்ணன்
ஒடிந்த ஒன்பதாண்டுகளாய்
எனக்குப் பலம் பெரியண்ணா
அன்பிற்கு இலக்கணம் நீர்
அன்னை தந்தைக் கடுத்தபடி
ஆண்டவனாய் நீர் இருந்தீர்
இறிவூட்டும் ஆசான் நீர்
இதயம் வெடிக்குதண்ணா
இப்படியாய் நடக்கு மென்று
இம்மியும் நினைக்கவில்லை
என்னைத் தனி மரமாய்
தவிக்க விட்டு எங்கு சென்றாய்
அன்னை,தந்தை,பிள்ளைகளை
அண்ணியின் ஆற்றாமையை
கண்டு உள்ளம் வெடிக்கின்றேன்
கண்ணீரை தந்துவிட்டு
கண்மணியே எங்கு சென்றீர்...?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமன்மார், மாமிமார்
## மனக் கலங்கல்

அன்பான மருமகனே எங்கு சென்றீர்
அமைதிக்கு இலக்கணமே நீர்
அன்னை தந்தையைப் போல் நிகராக
அன்பு காட்டி மதித்திடுவீர்
புன் சிரிப்பு ஒன்றே போதுமையா
உன் அன்பு காட்டிடவே
தன்வார்வத்தோடு தளராத
உள்ளம் கொண்டு நீர் வாழ்ந்திருக்களன்ன
வினை வந்ததையா
எமை கலங்க வைத்துவிட்டு
எங்கு சென்றீர் மருமகனே....?

## பெறாமகனின் பரிதவிப்பு

அன்போடு அரவணைத்தீர் பெரியப்பாவே
அப்பாவின் முகம் காணாத எனக்கு
அன்புக்கு இலக்கணம் ஆனீரே
தெம் போடு நானிருந்தேன்
உன் உறவும் இல்லாமல் போகுமென்று
எள்ளளவும் எண்ணவில்லை
என்னை விட்டு எங்கு சென்றீர்
ஏங்கித் தவிர்க்கின்றேன்
என்னருமை பெரியப்பாவே
எங்கு சென்றீர்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மா, அப்பம்மாவின் ஆற்றாமை

அன்பு பேரனாரே கரன் கரன் என்று
காது குளிர கேட்டிருந்தோம்
உன் பாசம் குறையாமல் எமை
ஓடி வந்து பார்த்திடுவாய்
உனை பறித்த காலனவன்
கண்ணற்ற செயல் செய்தான்
கூன் விழுந்த குருடர்களாய்
நாமிங்கிருக்கின்றோம்
பசு மரமாய் தளைத்தோங்கும்
வாழ்வதனை பறித்தானே
பட்ட மரமாக நாமிருந்து
பரிதவித்து தவிக்கின்றோம் ஐயா...!

## மைத்துனன்மார், மைத்துனிமார் மனப் பதற்றம்

கண்ணனான மைத்துணனே
கருணையுள்ளம் கொண்டவனே
என் தோழன் ஆகி நிற்கின்ற
ஏற்ற காலம் நெருங்கி வர
கனவாகிப் போகுமென்று
கணமேனும் நினைக்கவில்லை

பதுமையாய் பேசிடுவீர்
பண்பாக புன்னகைப்பீர்
நகைச்சுவை சொல்லிவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணன்மார், தங்கைமார் தம்பிமார் அரற்றல்

ஒரு தாய் வயிற்றில் பிறக்காத
குறை ஒன்று என்றாலும்
பெரு அன்பு கொண்டெம்மை
நிறைவாக்கி மகிழ்வீரே
தூரத்து காணும் போதும்
நிறை மதியாய் முகம் மலர்ந்து
சிரிப் பொன்றே சொல்லும் உம்
கறையிலா உள்ளத்தை
ஒரு கணப்பொழுதில்
எமையெல்லாம்
ஊமையாக்கி எங்கு சென்றீர்
சோதரனே...!

## பெரியப்பாமார், சித்தப்பாமார், சித்திமார் புலம்பல்

ஔிர் நிலவாய் உதித்தவனே
ஒப்பற்ற பாசத்திற்கு நீதான்
பண்பிற்கு பிறப்பிடம் நீதான்
பரிவுடனே பேசிடுவாய்
மதிப்பதற்கு உனை விஞ்ச யாருமில்லை
மழலை முகத்தோடு சிரிப்பொன்றே
போதுமடா மகனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அயலவர், நண்பர்கள் புலம்பல்

கள்ள மில்லாச் சிரிப்பும்
கபடமில்லா உள்ளமும்
அயலவரை உறவினராய்
அன்பாக நினைத்தீரே
உறவுதனை பேணி நின்ற
உத்தமரே எங்கு சென்றீர்
கறவையைப் பிரிந்திட்ட
கன்றதுவாய் கலங்குகின்றோம்.

---

**நீ எதை செய்தாலும்**
**அதன் பொருட்டு**
**உனது மனம், ஆன்மா,**
**முழுவதையும்**
**அர்ப்பணித்துவிடு.**

-சுவாமி விவேகானந்தர்-

**எவன் ஒருவன்**
**தனக்குத்தானே**
**மனக்கட்டுப்பாடுகளை**
**ஏற்படுத்திக்**
**கொள்கிறானோ**
**அவனே சுதந்திர**
**மனிதனாவான்**

-மகாத்மா காந்தி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக் காப்பு



தேவிதுணை

ஓம் சக்தி

**விநாயகர் துதி**

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றமும் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

**வேண்டுதல் கூற்று**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமங்கள் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லலோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டு விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியாரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்விசிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீர சக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னை காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்துவரு
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வு முண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கி வர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

## திருவண்ணாமலையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கள்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதா ரமளியின்மே நின்றும் புரண்டிங்கண்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 01

பாசம் பரஞ்சோதி கென்பா யிராப்பகனாம்
பேசும்போ தெப்போதிப்போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
ஈசனார்க் கன்பர்யா மாரேலோ ரெம்பாவாய். 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந் தென்
னத்த னானந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். 03

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொடுள்ளவர் சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்ளெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக்குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். 04

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

06

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீ ரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென்
-றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 07

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுண் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 09

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியு மெல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயாவழியடியோம் வாழ்ந்தோங்கா யாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
வையாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தாற்
றங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினா
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாயாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
-தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையாள் ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடலோ ரொம்பவாய் 18

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார் தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றியருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடம் தூபநல் தீபம் வைம்மின்
சக்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்(டு) இசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 01

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற் திருச்சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடு வகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்(து) உடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமின் எம்கோன் எம்கூத்தன்
தேவியும் தானும் வந்து எம்மை ஆளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே 02

சுந்தர நிறணிந்தும் மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடி எடுமின்
அந்தரர்கோன் அயன் தன்பெருமான்
ஆழியான்நாதன் நல்வேலன் தாதை
எம்தரம்ஆள் உமையாள் கொழுநற்(கு)
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா(சு) அணிமின்கள் உலக்கை எல்லாம்
காம்(பு) அணிமின்கள் கறை உரலை
நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே 04

அறு(கு) எடுப்பார் அயனும் அரியும்
அன்றி மற்று இந்திரனோ(டு) அமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்
நம்மிற் பின்(பு) அல்லா(து) எடுக்க ஒட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடி
முறுவற் செவ்வாயினீர் முக்கண் அப்பற்(கு)
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 05

உலக்கை பல ஓச்சுவார் பெரியார்
உலகமெல்லாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலரய்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்ப
தொண்டர் குழாம் எழுந்(து) ஆர்ப்ப ஆர்ப்ப
நாடவர் நம் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடக(ம்) மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 07

வாள் தடங்கண் மட மங்கை நல்லீர்
வரி வளை ஆர்ப்ப வண் கொங்கை பொங்க
தோள் திருமுண்டம் துதைந்(து) இலங்க
சோர்த்தெம்பிரான் என்று சொல்லிச்சொல்லி
நாள்கொண்ட நாண்மலர்ப் பாதம் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 08

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய் எனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடி
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 10

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப் பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 11

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குன் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்ப
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய் இதழ் துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிச்
கங்கை இரைப்பஅரா இரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்திருச்சுண்ணம் இடித்தும் நாமே. 14

ஞானம் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 17

அயன் தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கண் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிக்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
ஆதியும் அந்தமும் ஆயி னாருக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 20





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம்

| | | | |
|---|---|---|---|
| 01. | ப்ரஹ்மமுராரி | ஸுரார்சித | லிங்கம் |
| | நிர்மலபாஸித | ஸோபித | லிங்கம் |
| | ஜந்மஜதுக்க | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 02. | தேவமுனி ப்ரவ | ரார்ச்சித | லிங்கம் |
| | காமதறலம் | கருணாகர | லிங்க்ம் |
| | ராவண தர்ப்ப | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 03. | ஸர்வஸுகந்த | ஸுலேபித | லிங்கம் |
| | புத்திவிவிர்த்தன | காரண | லிங்கம் |
| | ஸித்தஸுராஸுரே | வந்தித | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 04. | கநக மஹாமணி | பூஷித | லிங்கம் |
| | பணிபதிவேஷ்டித | ஸோபித | லிங்கம் |
| | தஷஸுயக்ஞ | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 05. | குங்கும சந்தன | லேபித | லிங்கம் |
| | பங்கஜ ஹாரஸ் | ஸோபித | லிங்கம் |
| | ஸஞ்சிதபாப | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 06. | தேவகணார்ச்சித | ஸேபித | லிங்கம் |
| | பாவைர்பக்திபிர் | ஏமச | லிங்கம் |
| | திநகரகோடி | ப்ரபாகர | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 07. | அஷ்டதளோபரி | வேஷ்டித | லிங்கம் |
| | ஸர்வ ஸமுத்பவ | காரண | லிங்கம் |
| | அஷ்டதரித்ர | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 08. | ஸுரகுரு ஸுரவர | பூஜித | லிங்கம் |
| | ஸுரவநபுஷ்ப | ஸதார்சித | லிங்கம் |
| | பரமபதம் | பரமாத்மக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |

லிங்காஷ்டகம் இதம் புண்ணியம்
ய.˙.சித்சிவ சங்கீதோ
சிவலோகம் மலாப்புரோதி
சிவலேளஸஹ மோததே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்



பிறக்கும் பொழுது கொண்டுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொண்டுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வஞ் சிவன்தந்ததென்று கொடுக்கறியா(து)
இறக்கும் குலாமருக்கு என்சொல்லுவேன் கச்சியேகம்பளே 01

ஓயாமல் பொய் சொல்வார் நல்லோரை நிந்திப்பார் உற்றுப்பெற்ற
தாயாரை வைவார் கதிஆயிரஞ் செய்வார் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குபகாரஞ் செய்யார் தமையண்டினர்க் கொன்றும்
ஈயார் இருந்தென்ன, போயென்னெ கச்சியேகம்பனே. 02

கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல் சூத்திரங் கோள்களவு
கல்லாமல் கைத்தவரோடு இணங்காமல் கனவினும் பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தேகையர் மாயையிலே
சொல்லாமல் செல்வந்தருவாய் சிதம்பர தேசிகனே! 03

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும் இந்தப்
பிடிசார்ந்த வாழ்வை நிலைப்பதல்லால் பொன்னின் அம்பலவன்
அடிசார்ந்து நாம் உய்யவேண்டுமென்றே அறிவாரில்லையே. 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவாதிருக்க வரம்தரல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இது எப்படியோ
அறமார் புகழ்வதில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே அதுகாண் நல் மருந்துனக்கே. 05

ஐயுற் தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றியூர் உடையீர் திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப் பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே. 06

பொன்னால் பிரயோசனம் பொன்படைத்தார்கங்குண்டு பொன்படைத்தோன்
தன்னால் பிரயோசனம் பொன்னுக்கங்கேதுண்டு அத்தன்மையைப் போல்
உன்னால் பிரயோசனம் வேணதெல்லர் உண்டு உன்னைப்பணியும்
என்னால் பிரயோசனம் ஏதுண்டு காளத்தியீச்சரனே. 07

வருந்தேன் பிறந்தும் இறந்தும் மயங்கும் புலன்வழிப்போய்ப்
பொருந்தேன் நரகில் புகுகின்றிலேன் புகழிவாரிடத்தில்
இருந்தேன் இனியவர் கூட்டம் விடேன் இயல் அஞ்செழுத்தாம்
அரும்தேன் அருந்தவன் நின்அருளால் கயிலாயத்தானே 08

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கம் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப் பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க இருக்கையிலே
மண்ணுண்டு போகுதையோ கெடுவீர் இந்த மானுடமே 09

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு என்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டு எனும்படி கேட்டு விட்டோம் இனிக் கேள்மனமே
ஓடுண்டு கந்தையுண்டள்ளே யெழுத்தைந்தும் ஓதவுண்டு
தோடுண்ட கண்டனடியார் நமக்குத் துணையு முண்டே 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினாறு செல்வங்கள்

1. புகழ்
2. கல்வி
3. வெற்றி
4. வலிமை
5. நன்மக்கள்
6. பொன்
7. நெல்
8. நல்விதி
9. நுகர்ச்சி
10. அறிவு
11. அழகு
12. பெருமை
13. இனிமை
14. துணிவு
15. நோயின்மை
16. நீண்ட ஆயுள்

## காந்தி கூறிய ஏழு சமுதாய பாவங்கள்

- கொள்கையற்ற அரசியல்
- உழைப்பற்ற செல்வம்
- நெறியற்ற வாணிபம்
- பண்பாடற்ற கல்வி
- மனச்சாட்சியற்ற மகிழ்ச்சி
- மனிதாபிமானமற்ற அறிவியல்
- தியாகமற்ற வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு கட்டும் போது கவனிக்க வேண்டி வீட்டின் நீள அகலம்

| | | |
|---|---|---|
| 07அடி | - | எண்ணங்கள் நிறைவேறாது தடைப்படும் |
| 08 அடி | - | எண்ணிய காரியம் நிறைவேறும், செல்வம் பெருகும், பகை இருக்காது. |
| 09அடி | - | குடும்பத்தில் பிரச்சினை, சலிப்புகள் உண்டாகும். |
| 10அடி | - | பசு, தன தானிய விருத்தி |
| 11அடி | - | தீவினைகள் அணுகாது, வேளாண்மை விருத்தி |
| 13அடி | - | காரியத்தடங்கல், உறவினர் பகை |
| 14அடி | - | வாழ்வில் துன்பங்கள் துயரங்கள் நேரிடும் |
| 15அடி | - | வறுமை நோய்கள் ஏற்படும் |
| 16 அடி | - | மக்கட்பேறு, தனம் சேரும், மேன்மையான வாழ்வு |
| 17அடி | - | இறைவன் அருள் பாலிப்பார், அரச மதிப்பு, எதிரிகள் இருக்காது |
| 18அடி | - | பல வகையான துன்பங்கள் வந்து சேரும் |
| 19அடி | - | மனைவி, மக்கட்கு துன்பங்கள் ஏற்படும் |
| 20அடி | - | பொருள்வரவு, மக்கட்பேறு மகிழ்ச்சி உண்டாகும். |
| 21அடி | - | துன்பம் அணுகாது, பால் பாக்கியம் பெருகும் |
| 22 அடி | - | பகைவர் அஞ்சுவர், மகிழ்ச்சியான வாழ்வு குழந்தைச் செல்வம் உண்டு |
| 23, 24.25 அடி | - | நோய், விரோதம், ஆயுட் குறைவு ஏற்படும். |
| 26அடி | - | செல்வச்செழிப்பு, சந்திரனைப் போல் வாழ்வு |
| 27அடி | - | வேளாண்மை விருத்தி, உலகம் போற்றும் வாழ்வு |
| 28 அடி | - | பகைவர்கள் அஞ்சுவார்கள், செழிப்போடு நிறைவான வாழ்வு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 29 அடி | - | சகல செல்வமும் பெருகும் |
| 30 அடி | - | மக்கட்பேறு, செல்வச் செழிப்பு |
| 31 அடி | - | இறைவன் திருவருள் கிடைக்கும் |
| 32 அடி | - | இறைவன் திருவருள் கிடைக்கும் |
| 33 அடி | - | குடும்பம் சிறப்படையும் |
| 34அடி | - | துன்பம் பிணி உண்டாகும் |
| 35அடி | - | செல்வம் பல வழிகளிலும் சேரும் |
| 36 அடி | - | அரச பதவி கிடைக்கும் |
| 37அடி | - | இன்பசுகம், நல்வாழ்வு உண்டாகும் |
| 38 அடி | - | துன்பம், பிணி உண்டாகும் |
| 39அடி | - | இன்பசுகம், நல்வாழ்வு உண்டாகும் |
| 40 அடி | - | அலுப்பு, சலிப்பு சோர்வு உண்டாகும் |
| 41அடி | - | குபேரனைப் போல் வாழ்வார் |
| 42அடி | - | செல்வம் அனைத்தும் நிலையாக இருக்கும் |

**நாம் உலகில் பார்க்க**
**விரும்பும் மாற்றம்**
**முதலில் நம்மிடம்**
**நிகழ வேண்டும்**

-மகாத்மா காந்தி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிச் சமிக்ஞைகள்

| | |
|---|---|
| 01. சிவப்பு | நிறுத்த வேண்டும் என்பது இதன் கருத்து |
| 02. சிவப்பு செம்மஞ்சள் | வாகனங்களை நிறுத்த வேண்டும். பச்சை விளக்கு வந்ததும் நகர ஆயத்தமாக இருக்க வேண்டும். என்பதையும் உணர்த் துகின்றது. |
| 03. செம்மஞ்சள் | நிறுத்த வேண்டும். சிவப்பிற்கான மாற்றம் ஏற்படப் போகின்றது என்பதையும் உணர்த்துகின்றது. |
| 04. பச்சை | பச்சை ஒளியை நோக்கியுள்ள வாகனங்கள் நேராக முன்னோக்கிச் செல்லலாம் என்பதை உணர்த் துகின்றது. |
| 05. பச்சை அம்புக்குறி | அம்புக் குறியினால் காட்டப்படும் திசை நோக்கி வாகனங்கள் செல்ல அனுமதிக்கின்றது. |
| 06. விட்டெரியும் செம்மஞ்சள் | ஒளிச் சமிக்ஞைகளால் போக்குவரத்து கட்டுப்படுத்தப்படவில்லை என்பதை உணர்த்துகின்றது. |

இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவின்
தொலைபேசி இல:1955



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதசாரிகளுக்கான ஒளிச் சமிக்ஞைகள்

01. சிவப்பு நிற மனிதன்: வீதியைப் பாதசாரிகள் கடக்கக் கூடாது என்பதை உணர்த்துகின்றது

02. பச்சை மனிதன் : வீதியைப் பாதசாரிகள் பாதுகாப்பாகக் கடக்கலாம் என்பதை உணர்த்துகின்றது வீதியைக் கடக்க வேண்டுமானால்

1.பாதசாரிக்கடவை (மஞ்சட் கோட்டுப்பகுதி)

2.மேற்பாலம் அல்லது கீழ்ப்பாலம்ஆகியவற்றின் மூலம்.



நிறுத்துங்கள்




முன்னே வாருங்கள்



முன்னாலும் பின்னாலிருந்து வரும் வாகனங்களை நிறுத் துங்கள்.



முன்னே வாருங்கள்.



பின்னாலிருந்து வரும் வாகனங் களை நிறுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1976 | | 2018 |
| 06 | | 10 |
| 20 | | 11 |



கிளிநொச்சி, வண்ணேரிக்குளத்தைப் பிறப்பிடமாகவும்,
வவுனியா பெரியதம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். தனிநாயகம் பாஸ்கரன் (கரன்)

(வவுனியா இலங்கை வங்கி ஊழியர்)

உற்ற மனைவி கதறியழ
பெற்ற மக்கள் பதறியழ
உற்ற சொந்தம் பரிதவித்தழ
உறவு நீங்கிப் போனாயே

அன்பான எங்கள் ஆருயிர் நண்பா
அவரோடும் உறவோடும்
உற்ற சொந்தங்களோடும்
பெரியோரோடும் புகழோடும்
பெரு வாழ்வு வாழ்ந்தவரே

வந்தாரை வரவேற்று
அகமது மலர்ந்து
உணவிட்டு உபசரித்து
இன்சொல் மொழி கூறி
துயரறிந்து துணை நின்று
உதவிக்கரம் தந்து
உற்ற தோழனாய்க் காத்தவரே

இல்லையெனாது இனிய சொல்லால்
நறுமுக நகை
நாடி வந்தோர்
உள்ளம் உவகையுற
வாழ்வாங்கு வாழ்ந்தவரே
இன்று மண்மீதில் கண்மூடி
எங்கள் மனமெல்லாம் ரணமாக
உனைத் தேடித் தவிக்கின்றோம் - நண்பா
உங்கள் ஆன்மா சாந்தியுற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சனசமூகநிலையம், பெரியதம்பனை.

# கண்ணீர் அஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1976 | | 2018 |
| 06 | | 10 |
| 20 | | 11 |



வண்ணேரிக்குளம் கிளிநொச்சியை பிறப்பிடமாகவும்,
பெரியதம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். தனிநாயகம் பாஸ்கரன்

(எமது நண்பர்கள் ஜெரூசன், விதுசன் அவர்களின் அன்புத் தந்தை)

[illegible]
[illegible] சென்றுவிட்டீரோ...?
[illegible] திகைக்கின்றோம்
[illegible] ...?

[illegible] ...?
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்...

பிரிவுத்துயரில்:
[illegible]
([illegible]) [illegible], வவுனியா.

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

மண்ணில்
1976
.
06
.
20



விண்ணில்
2018
.
10
.
11

[illegible]

## அமரர். தனிநாயகம் பாஸ்கரன்

(இலங்கை வங்கி ஊழியர்)

[illegible]

மீண்டும் காண்திருக்க மாட்டீரோ?

[illegible]

பிரிவுத் துயரில்:
திருமதி. [illegible] லட்சுமி குடும்பத்தினர்
இல.34, பெரியதம்பனை.

---

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
1976
06
20



இறப்பு
2018
10
11

[illegible]

## அமரர். தனிநாயகம் பாஸ்கரன் (கரன்)

(வவுனியா இலங்கை வங்கி ஊழியர்)

[illegible]

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


சனசமூக நிலையம், பெரியதம்பனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

மலர்வு 20 - 07 - 1976



உதிர்வு 11 - 10 - 2018

பெரியதம்பனை வவுனியாவைச் சேர்ந்த

## அமரர் தனிநாயகம் பாஸ்கரன்

சொல்லியழ வார்த்தை இல்லை
சோகமான நாளாது இன்று எமக்கெல்லாம்
விதியின் வசத்தால் விடைபெற்று நீங்கள்
வீழ்விலும் நீர் வாழ்வீர் – என்றும்
கள்ளமற்ற வெள்ளை உள்ளத்தையும்
பன்முக ஆற்றலையும் கொண்ட நீங்கள்
நீள்துயில் தனை எமக்களித்து
இறைவன் திருப்பாதம் இணைந்தீரே
தங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

மதியாபரணம் முகுந்தன்

# கண்ணீர் அஞ்சலி



ஐயனார்புரம் வன்னேரியைப் பிறப்பிடமாகவும், பெரிய தம்பனை வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட, ஆனைவிழுந்தான், வன்னேரிக்குள அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலனசபைத் தலைவரின் அன்பு மகனாகிய

## அமரர்

## தனிநாயகம் பாஸ்கரன்

கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன் முகமும்
மறைந்து போனது எங்கே
கண்களிலே கண்ணீர் பொங்க
எம்மை ஆழாத்துயரில்
தவிக்க விட்டு எங்கு சென்றீர்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் மற்றும், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


பிறப்பு
1976.07.20

இறப்பு
2018.10.11


அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய
பூசகர், ஆலய பரிபாலன சபையினர்,
சிற்பாசாரி சி.காண்டீபன் குழுவினர்,
ஜெ.சிவநாதன் குழுவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்ணீர் அஞ்சலி



[illegible]

## அமரர். தனிநாயகம் பாஸ்கரன்

(இலங்கை வங்கி ஊழியர்)

**மண்ணில்: 1976.06.20 விண்ணில்: 2018.10.11**

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
1976 . 07 . 20

இறப்பு
2018 . 10 . 11



அமரர்

## தனிநாயகம் பாஸ்கரன்

*கள்ளமில்லா உள்ளமும்*
*கனிவான உம் பேச்சும்*
*காண்பவரை ஈர்க்கும் முகமும்*
*நெறிமுறை தவறாத பண்பும்*
*என்றும் எம் நெஞ்சினில்*
*நீங்காது இடம் பிடித்திருக்கும்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

---

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
1976 . 06 . 20

இறப்பு
2018 . 10 . 11



கிளிநொச்சி, வன்னேரிக்குளத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா, தம்பனையை வசிப்பிடமாகவும் கொண்டவரும், கள்ளாட்டிகனேசபுரம் உப தபால் அதிபர் திருமதி.பா.டோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், வவுனியா இலங்கை வங்கி உத்தியோகத்தருமான

## அமரர். தனிநாயகம் பாஸ்கரன் (கரன்)

கண்ணிலே தோன்றும் காட்சியெல்லாம்
கனவாகி நினைவாகி போவதுண்டு
மண்ணிலே பிறந்திட்ட மனிதரெல்லாம்
மண்ணால் மறைந்தோடிப் போவதுண்டு
எண்ணிலே அடங்காத விண்மீன்களும்
என்றோ நாளொன்றில் மறைந்த போதும்
நெஞ்சிலே உம் நாமம் - என்றும்
நீங்காமல் நிலைத்திடுமே...!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உப தபால் அதிபர்கள் சங்கம்,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் குலவிளக்காய் இலங்கிய திருவிளக்கு அணைந்த செய்திகேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் கூறிதுன்பத்தில் பங்கெடுத்து கொண்டோருக்கும் தொலைபேசி வழியாக அனுதாபச் செய்தி பகிர்ந்தோருக்கும் தூர தேசங் களில் இருந்து வந்து அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தீரா மழையிலும் வீட்டின் வீதிகளை செப்பனிட்டு உதவியதும் மற்றும் பல்வேறு உதவிகள் புரிந்த அனைவருக்கும் இலங்கை வங்கி உயர் அதிகாரிகள், பணியாளர்கள், நண்பர்கள் பல்வகையிலும் உதவி புரிந்தனர் அவர்களுக்கும், தபால் திணைக்கள அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் பொலீஸ் உத்தியோகத்தகள் ஆகியோருக்கும் பந்தல், ஒலி, ஒளி, வசதிகள் சேவை செய்தோருக்கும் வாகன வசதிகள், மற்றும் உணவு, தேநீர் வழங்கியோருக்கும் அஞ்சலிப் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிட்ட நண்பர்கள், பிரமுகர்கள் அனைவருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து உறவுகளுக்கும் அந்தியேட்டிக் கிரியை சிறப்புற ஆற்றிய மதகுருமார்க்கும் கலந்து கொண்ட உறவினர் நண்பர்களுக்கும் இன் நூலை வடிவமைத்து அச்சிட்ட சிவா பதிப்பகத் தினருக்கும் உள்ளம் நெகிழ்ந்து நன்றிகளை நவில்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

தனிநாயகம் + கமலாம்பிகை

- ❋ **பாஸ்கரன் (கரன்)**
- ❋ தசிகரன் (தயன்)
  - கரிசர்
- பகிர்திகா + கிருபாகரன் (லண்டன்)

முருகேசு + நாகேஸ்வரி

- குகனேஸ்வரி + விக்கினேஸ்வரன்
  - சியாந்தன்
  - தவிசேக்
- **லோகேஸ்வரி**
- புவனேஸ்வரி + விஜேந்திரன்
  - நிருஷிகா
  - சஷ்மிகா
- கெங்கேஸ் + துசாந்தினி
  - ஐதுசன்
  - மிதுஷன்
- ❋ தேவதர்சினி

**பாஸ்கரன் (கரன்)** + **லோகேஸ்வரி**

- **லிதுஷன்**
- **விதுஷன்**

❋ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி



01. அறஞ்செய விரும்பு
02. ஆறுவது சினம்
03. இயல்வது கரவேல்
04. ஈவது விலக்கேல்
05. உடையது விளம்பேல்
06. ஊக்கமது கைவிடேல்
07. எண் எழுத்து இகழேல்
08. ஏற்பது இகழ்ச்சி
09. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகஞ் சுருக்கேல்
14. கண்டு ஒன்று சொல்லேல்
15. ஙப்போல் வளை
16. சனி நீராடு
17. ஞயம்பட உரை
18. இடம்பட வீடு எடேல்
19. இணக்கம் அறிந்து இணங்கு
20. தந்தை தாய் பேண்
21. நன்றி மறவேல்
22. பருவத்தே பயிர் செய்
23. மன்று பறித்து உண்ணேல்
24. இயல்பலாதன செயேல்
25. அரவம் ஆடேல்
26. இலவம் பஞ்சில் துயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகு அலாதன செயேல்
29. இளமையில் கல்
30. அரனை மறவேல்
31. அனந்தல் ஆடேல்
32. கடிவது மற
33. காப்பது விரதம்
34. கிழமைப் படவாழ்
35. கீழ்மை அகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப் பிரியேல்
38. கெடுப்பது ஒழி
39. கேள்வி முயல்
40. கைவினை கரவேல்
41. கொள்ளை விரும்பேல்
42. கோதாட்டு ஒழி
43. சக்கர நெறி நில்
44. சான்றோர் இனத்திரு
45. சித்திரம் பேசேல்
46. சீர்மை மறவேல்
47. களிக்கச் சொல்லேல்
48. சூது விரும்பேல்
49. செய்வன திருந்தச் செய்
50. சேரிடம் அறிந்து சேர்
51. சை எனத் திரியேல்
52. சொல் சோர்வு படேல்
53. சோம்பித் திரியேல்
54. தக்கோன் எனத்திரி
55. தானமது விரும்பு
56. திருமாலுக்கு அடிமை செய்
57. தீவினை அகற்று
58. துன்பத்திற்கு இடம் கொடேல்
59. தூக்கி வினை செய்
60. தெய்வம் இகழேல்
61. தேசத்தோடு ஒத்து வாழ்
62. தையல் சொல் கேளேல்
63. தொன்மை மறவேல்
64. தோற்பன தொடரேல்
65. நன்மை கடைப்பிடி
66. நாடு ஒப்பன செய்
67. நிலையிற் பிரியேல்
68. நீர்விளை யாடேல்
69. நுண்மை நுகரேல்
70. நூல் பல கல்
71. நெற்பயிர் விளை
72. நேர்பட ஒழுகு
73. நைவினை நணுகேல்
74. நொய்ய உரையேல்
75. நோய்க்கு இடம் கொடேல்
76. பழிப்பன பகரேல்
77. பாம்பொடு பழகேல்
78. பிழைபடச் சொல்லேல்
79. பீடு பெற நில்
80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
81. பூமி திருத்தி உண்
82. பெரியாரைத் துணைக்கொள்
83. பேதமை அகற்று
84. பையலோடு இணங்கேல்
85. பொருள்தனைப் போற்றி வாழ்
86. போர்த் தொழில் புரியேல்
87. மனம் தடுமாறேல்
88. மாற்றானுக்கு இடம் கொடேல்
89. மிகைபடச் சொல்லேல்
90. மீதூண் விரும்பேல்
91. முனைமுகத்து நில்லேல்
92. மூர்க்கரோடு இணங்கேல்
93. மெல்லினல்லாள் தோள் சேர்
94. மேன்மக்கள் சொல் கேள்
95. மை விழியார் மனை அகல்
96. மொழிவது அறமொழி
97. மோகத்தை முனி
98. வல்லமை பேசேல்
99. வாது முற்கூறேல்
100. வித்தை விரும்பு
101. வீடுபெற நில்
102. உத்தமனாய் இரு
103. ஊருடன் கூடி வாழ்
104. வெட்டெனப் பேசேல்
105. வேண்டி வினை செய்யேல்
106. வைகறைத் துயில் எழு
107. ஒன்னாரைத் தேறல்
108. ஓரம் சொல்லேல்

சிவா பதிப்பகம், இ.போ.ச வளாகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org